ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1636/12 - 2010 ජනවාරි 13 වැනි බදාදා - 2010.01.13
*1636/12 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### கைத்தொழில் பிணக்குகள் சட்டம்

*10ஆம் பிரிவின் 2ஆம் உபபிரிவின் கீழான கட்டளை*

*1957 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (131 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர் அதாவுத செனெவிரத்ன ஆகிய நான், சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேயிலை வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கானதும் இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கானதுமான சம்பளச் சபைகளால் மேவப்பட்டவரும், அத்துடன் இலங்கைத் தொழில்தருநர் சம்மேளனத்திற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பிற்குமிடையில் 2009, ஒற்றோபர் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் மற்றும் 2009, ஒற்றோபர் 30 ஆந் திகதிய 1625/26 ஆம் இலக்க வர்த்தமானியில் "2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க கூட்டு உடன்படிக்கை" என்னும் தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டதுமான கூட்டு உடன்படிக்கையால் பிணிக்கப்படாதவருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும் 2010, சனவரி 15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் மேற்கூறப்பட்ட கூட்டு உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளை விடக் குறையாத அளவு சாதகமுள்ள நியதி நிபந்தனைகளை அனுசரித்தல் வேண்டுமென இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

அதாவுத செனெவிரத்ன,
தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர்.

கொழும்பு,
*2010, சனவரி 13.*

*1- 824*